(9) அமைச்சரின் அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில சாலைகளை செப்பனிடும்பணி பற்றிய எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டு குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த மன்றத்தில் நேற்றைய தினம் நிதி ஒதுக்க மசோதாவின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியபோது, தென்னார்க்காடு மாவட்டத்தில் பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில சாலைகளைச் செப்பனிடும் பணி ஒப்படைக்கப்பட்டது குறித்து சில குற்றச்சாட்டுகளைக் கூறினார். அவர் பேசியதிலிருந்து, கீழ்க்கண்ட சாலைகள் அவரால் குறிப்பிடப்படுகிறது என்று தெரிகிறது.

1. அழகப்ப சமுத்திரத்திலிருந்து குள்ளஞ்சாவடி—காட்டு கூடலூர் வரையுள்ள சாலை.

2. சென்னை-கே. டி. ரோடிலிருந்து அழகப்பசமுத்திரம் வரையுள்ள சாலை.

3. சாத்திபட்டிலிருந்து முத்தரசங்குப்பம் வழியாக புதுப் பாளையம் வரையுள்ள சாலை.

மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொரு சாலையைப் பொறுத்த வரையிலும், சாலைகளின் பணிகள் பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தாலும், எல்லாப் பணிகளுமே ஒரே ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதன் மூலம் பணிகள் விரைவாக நடைபெற வேண்டுமென்ற வகையில் சாலைகள் பிரிக்கப்பட்டு செப்பனிடப்பட வேண்டுமென்ற நோக்கமே ஈடேறாமல் போய்விட்டது என்பதுதான் எதிர்க்கட்சித் தலைவர் சாட்டிய குற்றச்சாட்டின் சாராம்சம் ஆகும். இந்தக் குறிப்பிட்ட மூன்று சாலைப் பணிகளும் எந்த எந்த ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டன என்ற பெயர் விவரங்களையும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். அவை பின்வருமாறு :—

1. வி. பாலசுப்பிரமணியம், மணப்பத்தூர்.

2. பூவராகமூர்த்தி, விஸ்வநாதன்.

3. வேணு,

இது குறித்து நான் விசாரித்தேன். மேற்குறிப்பிடப்பெற்ற ஒவ்வொரு சாலையைப் பொறுத்தவரையிலும், பிரிக்கப்பட்ட பல பணிகளும் ஒரே நபருக்குக் கொடுக்கப்படவில்லை. கீழ்க்கண்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1978 மார்ச் 31] [திரு. சி. பொன்னையன்]

1. குள்ளஞ்சாவடி-காட்டுகூடலூரிலிருந்து அழகப்ப சமுத்திரம் வரையுள்ள சாலை.

பணியின் பிரிவு.	மதிப்பீட்டுத் தொகை.	ஒப்பந்தக்காரரின் பெயர்.
0/0 முதல் 1/0 வரை	ரூ. 36,000 ..	எஸ். டி. ராஜவேல், நடுக்குப்பம் என். கலியபெருமாள், மாணடிக் குப்பம்.
1/0 முதல் 2/0 வரை	ரூ. 36,500 ..	கே. உக்கரவேல், சிறுதொண்ட மாதேவி. எம். அய்யாக்கண்ணு, சிறு தொண்டமாதேவி.
2/0 முதல் 3/0 வரை	ரூ. 35,500 ..	கே. திருநாவுக்கரசு, சிறுதொண்ட மாதேவி. வி. தணிகாசலம். சிறுதொண்ட மாதேவி,
3/0 முதல் 4/0 வரை	ரூ. 35,000 ..	பி. காந்தி, அழகப்பசமுத்திரம். பக்கிரி, அழகப்பசமுத்திரம்.

2. சென்னை கே. டி. சாலை முதல் அழகப்பசமுத்திரம் வரையுள்ள சாலை.

பணியின் பிரிவு.	மதிப்பீட்டுத் தொகை.	ஒப்பந்தக்காரரின் பெயர்.
0/0 முதல் 1/0 வரை	ரூ. 24,000 ..	எஸ் கனகசபை, கீழ்க்குப்பம். பி. பழனி, கீழ்க்குப்பம்.
1/0 முதல் 2/0 வரை	ரூ. 24,000 ..	டி. பூவராகமூர்த்தி, காடாம் புலியூர். பி. ஜி. விஸ்வநாதன், காடாம் புலியூர்.
2/0 முதல் 3/0 வரை	ரூ. 29,000 ..	கே. தனபதி, காட்டுப்பாளையம். ஆர். பரசுராமன், பாவகுளம்.
3/0 முதல் 4/0 வரை	ரூ. 33,500 ..	ஆர். மெய்யழகன், குறிஞ்சிப் பாடி. என். ஆர். விஜயராகவன், குறிஞ் சிப்பாடி.

3. சாத்திப்பட்டு முதல் முத்தரசங்குப்பம் வழியாக புதுப்பாளையம் வரையுள்ள சாலை.

0/0 முதல் 1/0 வரை	ரூ. 40,000 ..	இ. பாலசுப்பிரமணியம், சாத்திப் பட்டு.
		பி. ஜெயகிருஷ்ணன், சாத்திப் பட்டு.
1/0 முதல் 2/0 வரை	ரூ. 38,500 ..	கே. ராமகிருஷ்ணன், சாத்திப் பட்டு.
		சி, ராஜவேலு, சாத்திப்பட்டு.
2/0 முதல் 2/8 வரை	ரூ. 21,500 ..	எஸ். ஜெயபாலன், முத்தரசன் குப்பம்.
2/8 முதல் 4/0 வரை		வேலை இல்லை.
4/0 முதல்	ரூ. 37,500 ..	எஸ். கனகசபை, கீழக்குப்பம்.
5/0 வரை		வி. பழனி, கீழக்குப்பம்.
5/0 முதல் 6/0 வரை	ரூ. 39,000 ..	கே. நாராயணசாமி, காட்டாண் டிக்குப்பம்.
		என். கலியபெருமாள், மாண்டிக் குப்பம்,
6/0 முதல் 6/5 வரை	ரூ. 19,000 ..	கே. எஸ். வேணுகோபால், கீழக் குப்பம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட மணப்பத்தூர் வி. பாலசுப்ரமணியத்திற்கு 4 பணிகளல்ல, ஒரு பணி கூட கொடுக்கப்படவில்லை. பூவராகமூர்த்தி, விசுவநாதன் என்போருக்கு ஒரே வேலை நான்கு பணிகளாகப் பிரிக்கப்பட்டு தரப்பட்டது என்பது ஆதாரமற்ற கூற்றாகும். மாறாக விதிகட்கு உட்பட்டு ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள ஒரே பணிதான் தரப் பட்டுள்ளது. வேணு என்ற நபருக்கு ரூ 25,000-க்கு வேலை தரப் படவில்லை. அது ஆதாரமற்ற கூற்று. கீழ்நிலையில் ஏதாவது முறைகேடுகளோ அல்லது தவறுகளோ ஏற்படுமாயின் அவைகளைக் கண்டுபிடித்திடத் தேவையான உதவியை எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது எதிர்க்கட்சியைத் சேர்ந்த உறுப்பினர்களோ நல்கிட முன்வருவார்களானால், அவைகளைக் குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், அவைகளை வரவேற்க அரசு தயாராக இருக்கிறது, ஆனால் அவையில், எந்த விதமான

ஆய்வும் செய்யாமல் குற்றச்சாட்டுகளை சுமத்துவது அவையின் உரிமைகளை தவருகப் பயன்படுத்துவது மட்டுமல்ல, சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொறுப்பான பதவி வகிப்பவர்கள் குற்றச்சாட்டுகளை ஆதாரமில்லாமல் சுமத்தும் பொழுது, அதைக் குறித்து அரசும் நாளாவட்டத்தில் அக்கறை காட்டுவது கடினமாகி விடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) உரிமைப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

(இ) எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டு குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வர விரும்புகிறேன். அதற்கு என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அந்த குற்றச்சாட்டைப் பற்றி பொதுவாகப் பேசுகின்ற நேரத்தில் நான் உங்களிடம்.........

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்றைய சம்பவத்தைப்பற்றி உரிமைப்பிரச்சினை கிளப்பப்படும்பொழுது எழுத்து மூலமாகத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆகவே எழுத்து மூலமாகக் கொடுத்திருந்தால் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அவையில் ஏற்பட்ட சம்பவங்களைப் பற்றி விவாதிக்கின்ற நேரத்தில் எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.........

திரு. க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே அவைத் தலைவர் தெரிவித்த அந்த ஆணைக்கிணங்க முறைக்கிணங்க முதல் நாள் நடைபெற்ற பிரச்சினையை மறுநாள் உரிமைப் பிரச்சினையாக எழுப்பக் கூடாது. அப்படித் தருவதாக இருந்தால் அது எழுத்து மூலமாகத்தான் தரப்படவேண்டும் என்று தலைவரவர்கள் அறிவித்திருக்கிருர்கள். ஆகவே அந்த முறை பின்பற்றப்படும் என்று நம்புகிறேன்.

THE HON. THIRU G. R. EDMUND : I am also on a point of order. (குறுக்கீடு) Any member in the House can raise a point of order. There is no prohibition for a Minister.

பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிருர்கள். மாண்புமிகு உறுப்பினர் உரிமைப்பிரச்சினை